
# கி.பி. 1600 முதல் இன்று வரை கிறிஸ்தவத்தின் பரவல்

அறிக்கை: இந்தப் பாடத்தைப் படிக்கும் முன் நீங்கள் கிறிஸ்தவத்தின் பண்டைய வரலாற்றைப் பற்றிய H4a1, H4a2, ஆகிய பாடங்களை வாசிக்க வேண்டும். சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் H4b3 பாடத்தை வாசிக்கவும்.

## 1. கிறிஸ்தவத்தின் வரலாற்றை போதிக்க ஜெபத்தோடும் வார்த்தையோடும் ஆயத்தப்படவும்.

ஜெபம்: "கர்த்தராகிய இயேசுவே, இந்த உலகத்தில் நீர் என்ன செய்து கொண்டிருக்கிறீர் என்பதையும், நற்செய்தியை மற்றவர்களுக்கு எடுத்துச் செல்வதில் நாங்கள் என்ன பங்கு ஆற்ற வேண்டும் என்பதையும் நானும் என் சபைமக்களும் அறிந்து கொள்ள உதவுவீராக."

**20 ம் நூற்றாண்டில் மொத்த உலக மக்கள் தொகையில்**
**செயல்படும் கிறிஸ்தவர்களின் சதவிகிதம்:**




**செயல்படும் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை 0% லிருந்து உலக மக்கள் தொகையில் 2.5% தை எட்ட 18 நூற்றுண்டுகள் பிடித்தன (1900 வரை).**
**1970 ல் இது 5% மாக வளர 70 ஆண்டுகளே பிடித்தன.**
**11.2% ஆக மாற வெறும் 30 ஆண்டுகளே ஆயின(2000).**

**2000 ல், உலக வரலாற்றிலேயே முதன் முறையாக 9 பேர்க்கிறிஸ்தவர்கள் அல்லது கிறிஸ்தவர் அல்லாதவர்களுக்கு 1 செயல்படும் கிறிஸ்தவர் இருக்கிறார்.**

வேத ஆய்வு

சாதாரண கிறிஸ்தவர்களைத் தலைவர்கள் பலப்படுத்திய போது நற்செய்திக்கு என்ன நிகழ்ந்தது என்பதை அப்.6:5-7ல் காண்க. (பதில்: அவர்கள் அதை மேலும் எடுத்துச் செல்வதால் இன்னும் பலர் விசுவாசிகளாக மாறுவார்கள்).

அதிகாரிகள் கிறிஸ்தவர்களுக்கு எதிராக மாறுவதால் சுவிசேஷத்திற்குப் பொதுவாக என்ன நேரிடும் என்பதை அப்.8:1-8ல் காண்க. பிற மக்கள் சமுதாயங்கள் நற்செய்தியைக் கற்றுக் கொள்ளும்படியாக சபை என்ன செய்ய வேண்டும் என்று பரிசுத்த ஆவியானவர் கேட்கிறார், என்பதை அப்.12:24 - 13:5 ல் காண்க.

புறக்கணிக்கப்பட்ட மக்களை ஊடுருவிச் செல்லும் ஊழியர்களின் முக்கிய நடவடிக்கைகள் என்ன என்பதை அப்.14:21-23 ல் காண்க.

- அவர்கள் எதைப்பற்றி பேசுகிறார்கள்? (21).
- அவர்கள் எப்படிப்பட்ட இடத்துக்குப் போகிறார்கள்?

- புதிய விசுவாசிகளுக்கு அவர்கள் என்ன செய்கிறார்கள்? (22)
- புதிய கிறிஸ்தவர்களுக்கு எப்படிப்பட்ட தலைவர்கள் தேவை? (23)
- ஊழியர்கள் விட்டுச் சென்றபின் புதிய சபைகளை யார் வழி நடத்துவார்கள்?

## கி.பி. 1600 – 1900 வரை உள்ள வருடங்கள்

ஐரோப்பாவில் நடந்த ஆவிக்குரிய மற்றும் கலாச்சார மறுமலர்ச்சி, கிறிஸ்தவர்கள் வேதாகமத்தை பெற்று அதை வாசிக்கும் வாய்ப்பை நல்கியது. இதனால் பல விளைவுகள் ஏற்பட்டன:

- ஆயிரக்கணக்கான ஐரோப்பியர்கள் இயேசுவில் உண்மையான விசுவாசத்தை அறிந்து பல சபை சம்பிரதாயங்களில் இருந்து விடுதலை பெற்றனர்.
- வட ஐரோப்பியர்கள் ரோமுக்கும் போப்புக்கும் எதிராக எழும்பி, மடங்களை அழித்து, புராட்டஸ்டாண்டு மறுமலர்ச்சியைக் கொண்டுவந்தனர்.
- ஜெர்மனியிலும் இங்கிலாந்திலும் இருந்த புராட்டஸ்டாண்டுகள் பல கடலோரப் பகுதிகளுக்கு ஊழியர்களை அனுப்பினர்.
- கத்தோலிக்க இராணுவம் தென் அமெரிக்காவை பிடித்த போது, பல புராட்டஸ்டாண்டுகள் வட அமெரிக்காவுக்கள் சென்று பல சபைப்பிரிவுகளை ஆரம்பித்தனர்.
- இருப்பினும், பகுத்தறிவுவாதம் (மானிட அறிவைச் சார்தல்) மெதுவாக ஐரோப்பியர்களிடையே கிறிஸ்தவ நம்பிக்கையை அகற்றி அந்த இடத்தைப் பிடித்தது.

## மார்ட்டின் லூதர்

புதிய ஏற்பாட்டை ஆராய்ந்து கொண்டிருந்த ஒரு கத்ததோலிக்கத் துறவியான லூதர், தேவன் மக்களை விசுவாசத்தின் மூலமாகவே இரட்சிக்கிறார் என்பதை அறிந்து கொண்டார். 1517 ல் அவர் "தொண்ணூற்றைந்து ஆய்வுகள்" என்பதை பிரசுரித்தார். அது ஐரோப்பியர்களை வேதாகமத்துக்குள் வந்து தங்கள் விசுவாசத்தை அறிந்து நடவடிக்கைகளைத் தெரிந்து கொள்ளுமாறு அழைத்தது. கத்தோலிக்க போப் அவருக்கு தடை விதித்ததனால் அவர் மறைந்து கொண்டார். லூதரின் வேதாகம எண்ணங்கள் ஐரோப்பாவில் மிகவும் செல்வாக்கு பெற்று, புராட்டஸ்டாண்டு மறுமலர்ச்சியை ஊக்கப்படுத்தின. இன்று அநேக புராட்டாஸ்டாண்டு சபைப் பிரிவுகள் வேதாகமத்துக்கு திரும்பும் ஒரு மறுமலர்ச்சி தேவைப்படுகிறது.

## 20 ஆம் நூற்றாண்டு

ஐரோப்பியர்களின் ஆதிக்கம் இல்லாத வட அமெரிக்கர்கள் 1000 க்கும் அதிகமான மொழிகளில் வேதாகமத்தை மொழிபெயர்த்து பல தேசங்களில் தங்கள் சபைகளை நிறுவினர். அதற்கு பல விளைவுகள் ஏற்பட்டன:

- அவர்கள் பல சுதந்திரமான சுவிசேஷ ஊழிய அமைப்புகளை ஆரம்பித்தனர்.
- பல நாடுகளில் உள்ள தேசிய சபைகள் சுதந்திரம் பெற்று, தன்னுரிமை அடைந்து, சுவிசேஷ சபைகளாகி, தங்கள் சுதேச மிஷனரிகளை அனுப்பத் தொடங்கியது.
- அதிகாரிகளால் துன்புறுத்தப்பட்ட போதும், சீனாவில் வீட்டு சபை இயக்கம் வேகமாகப் பரவியது.
- உலகத்தில் இன்று சுவிசேஷ கிறிஸ்தவமே வேகமாக வளரும் மத இயக்கமாகும்.
- பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள் சீனா, தெற்கு ஆசியா, ஆப்பிரிக்கா, தெற்கு அமெரிக்கா, இந்தோனேசியா ஆகிய இடங்களில் வாழ்கின்றனர்.

## 21 ஆம் நூற்றாண்டின் ஆரம்பம்

பல தேசங்களிலும் உள்ள சபைகள் எல்லாம் இன்னும் மீதமுள்ள புறக்கணிக்கப்பட்ட மக்கள் சமுதாயத்தை ஊடுருவ முயன்று கொண்டு இருக்கின்றனர். இது கிறிஸ்தவத்தின் மேல் பல விளைவுகளை ஏற்படுத்தியது.

- கிறிஸ்தவத்துக்கு எதிர்ப்புள்ள பல இடங்களில் எல்லாம் தானாகவே, சுதந்திரமான “சபை ஸ்தாபன இயக்கங்கள்” எழும்ப ஆரம்பித்துள்ளன.
- பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள் தங்கள் மொழியிலேயே வேதாகமத்தைப் படிக்கின்றனர்.
- இயேசுவுக்கு அன்பிலும், ஜெபத்திலும், ஐக்கியத்திலும், இரக்கத்திலும், சுவிசேஷத்திலும் கீழ்ப்படிய, பழைய சபை மரபுகளில் இருந்து பல விசுவாசிகள் சுதந்திரம் பெற்றுள்ளனர்.
- பல சபைகள் தங்கள் மக்களையே ஆவிக்குரிய தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கின்றனர்.
- ஆராதனை செய்பவர்கள் தங்கள் சொந்த கலாச்சார வடிவங்களையும் பழக்க வழக்கங்களையும் பயன்படுத்துகின்றனர்.

## 2. வரும் வாரத்திற்கான நடவடிக்கைகளை உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்.

தங்கள் சொந்த மொழியில் வேதாகமம் இல்லாத விசுவாசிகளை கண்டறிந்து அவர்கள் வாங்கக் கூடிய வேதாகமத்தைக் கொண்டுவர திட்டமிடவும்.

எந்த விசுவாசிகளுக்கு வாசிக்கத் தெரியாது என்று கண்டறிந்து அவர்களைத் தங்கள் வேதாகமத்தை படிக்க வைக்கும் திட்டம் தீட்டவும்.

இயேசுவுக்கு சுதந்திரமாகக் கீழ்ப்படியவும், அதைச் செய்யுமாறு பிறருக்கு உதவவும் தடையாய் இருக்கும் சபை சம்பிரதாயத்தை பற்றி இணைந்து விவாதியுங்கள். பெரும்பான்மையான சபை சம்பிரதாயங்கள் அடுத்த கலாச்சாரங்களில் இருந்தே வருகின்றன.

உங்கள் சபை வெளியில் இருப்பவர்களின் காணிக்கையை நம்பி இருக்கிறதா என்பதை விவாதித்து, தன்னைத் தானே அது தாங்குவதற்கான திட்டங்களை வகுத்துக் கொள்ளுங்கள். தங்கள் தேவைகளுக்காக அவரை நம்புகிற மந்தையை தேவன் ஆசீர்வதிக்கிறார்.

உங்களுக்கு அருகில் இருக்கும் எந்த மக்கள் சமுதாயத்தில் போதுமான கிறிஸ்தவர்களும், சபைகளும் இல்லை என்பதைக் கண்டறியுங்கள். அவர்களுக்கு உதவி செய்ய ஜெபித்து, உங்கள் உறுப்பினர்களில் சிலரை ஊழியர்களாக அனுப்பத் திட்டமிடுங்கள்.

பிற சபைகளில் மேய்ப்பர்களை பயிற்சி செய்வதில் ஒத்துழைத்து ஊழியர்களை அனுப்புவதற்கு உதவி செய்யவும்.

## 3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்.

நற்செய்தி எவ்வாறு பரவுகிறது என்பதைப் பற்றிய வசனங்களை (பகுதி 1 ல்) வாசித்து விசுவாசிகள் தங்களுக்குள் **விவாதிக்கவும்.**

கிறிஸ்தவத்தின் கடைசி 400 ஆண்டு வரலாற்றில் விசுவாசிகள் எவ்வாறு நற்செய்தியை பரப்பினர் என்பதை **விளக்கவும்.**

சுவிசேஷ ஊழியம் செய்த விசுவாசிகள் தேவன் செய்ததைக் குறித்து **சாட்சி** கொடுக்கட்டும்.

வீட்டுக் **குழுக்களிலும்**, செல் கூட்டங்களிலும் தேவன் உதவியதைப் பற்றி விசுவாசிகள் சாட்சி கூறட்டும்.

**குழந்தைகள்** தாங்கள் தயாரித்த நாடகத்தை வழங்கட்டும்.

அப். 20:7 ஐ வாசித்து **கர்த்தரின் பந்தியை** அறிமுகப் படுத்துங்கள். ஆதி சபைகளில் கர்த்தரின் பந்தி முறையாகத் தொடர்ந்து பரிமாறப்பட்டது. ஆரம்பத்தில் இருந்தே பெரும்பான்மையான விசுவாசிகள் இந்த முன்னுதாரணத்தையே பின்பற்றினர் என்பதை விளக்கவும்.

திட்டமிடவும், ஜெபிக்கவும், ஒருவருக்கொருவர் ஊக்கமளிக்கவும் இரண்டு அல்லது மூன்று பேர் கொண்ட **குழுக்களை** அமைக்கவும்.

எல்லோருமாக சேர்ந்து மாற்கு4:31-32 ஐ மனப்பாடம் செய்க. இயேசு தேவ ராஜ்யத்தைப் பற்றி விவரிக்கிறார் என்பதை முதலிலேயே விளக்கிக் கூறவும்.

Copyright 2005 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net